திருச்சியின் வருவாய்க் கோட்டமாக இருந்து 1974-ம் ஆண்டு தமிழகத்தின் 15-வது மாவட்டமாக புதுக்கோட்டை பிரிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் இருந்த கந்தர்வக்கோட்டை, அறந்தாங்கி, கீரமங்கலம் ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு, தனி மாவட்டமாக உருவானது.



1802-ம் ஆண்டு திருச்சி மாவட்டம் ஆங்கிலேயர்களால் உருவானபோது வடக்கு டிவிஷனில் பெரம்பலூர் அமைந்திருந்தது. 1861-ம் ஆண்டு ஏற்பட்ட நிர்வாக மாற்றத்தால் பெரம்பலூர் தாலுகாவாக உருவானது. 1995-ம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டம் தொடங்கப்பட்டது.

## சின்னச் சின்னதாய்



பொன்னமராவதியில் நேற்று நடைபெற்ற திமுக கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி.

### பொன்னமராவதியில் திமுக செயல்வீரர்கள் கூட்டம்

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து திருமயம் சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளரும், இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி பேசியபோது, "மக்கள் நலத்திட்டங்கள் தொடர்ந்து கிடைக்க மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு வழங்க வேண்டும். தேர்தல் பணிகளில் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்" என கேட்டுக்கொண்டார்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்காளர்களை நேரடியாக சந்தித்து அரசு சாதனைகளை எடுத்துரைப்பது, கூட்டணியின் கொள்கைகள் மற்றும் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது உள்ளிட்ட பணிகள் குறித்து செயல்வீரர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்துகொண்டனர்.

### அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதிகளில் 15 பேர் வேட்புமனு

**அரியலூர்**

அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதிகளில் 15 வேட்பாளர்கள் நேற்று வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ள நிலையில் வேட்புமனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வருகிறது. அரியலூர் சட்டப்பேரவைத் தொகுதி தவெக வேட்பாளர் சிவக்குமார் நேற்று கோட்டாட்சியர் பிரேமியிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவருக்கு மாற்று வேட்பாளராக அவரது மனைவி ஈஸ்வரி மற்றும் சுயேச்சை வேட்பாளர்களாக க.குமார், கிருஷ்ணமூர்த்தி, விஜயகுமார், வெற்றிவேல் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

ஜெயங்கொண்டம் சட்டப்பேரவைத் தொகுதி பாமக வேட்பாளர் வைத்திலிங்கம், உடையார்பாளையம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் மனோகரனிடம் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அவருக்கு மாற்று வேட்பாளராக பாமக மாவட்டச் செயலாளர் தமிழ்மறவன் மற்றும் சுயேச்சை வேட்பாளர்களாக வைத்திலிங்கம் மனைவி தேன்மொழி, ஜெயபாலன் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இதே தொகுதியில் தவெக வேட்பாளர் கவிதா ராஜேந்திரன் தனது வேட்புமனுவை ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் ஆனந்தவேலிடம் தாக்கல் செய்தார். மாற்று வேட்பாளராக அவரது மனைவி ஜெயலட்சுமி மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி வேட்பாளராக அழகேசன், சுயேச்சை வேட்பாளர்களாக வினோத் சபரி, ஆனந்தகுமார் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

அந்த வகையில் அரியலூர் தொகுதிக்கு 6 பேர், ஜெயங்கொண்டம் தொகுதிக்கு 9 பேர் என மொத்தம் 15 பேர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.



செட்டிசத்திரம் டிஎன்பிஎல் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழாவில் பங்கேற்றோர்.

### டிஎன்பிஎல் மழலையர் தொடக்க பள்ளி 3-வது ஆண்டு விழா

**திருச்சி**

திருச்சியை அடுத்த செட்டிசத்திரம் டிஎன்பிஎல் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியின் 3-வது ஆண்டு விழா நடைபெற்றது.

திருச்சி மாவட்டம் செட்டிசத்திரம் பகுதியில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (டிஎன்பிஎல்) அலகு 2-ன் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியின் 3-வது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் வி.சுரேஷ்குமார் வரவேற்றார். பள்ளிக் குழுமத்தின் தலைவரும், டிஎன்பிஎல் முதன்மைப் பொதுமேலாளருமான (இயக்கம்) டி.வி.எஸ். எஸ்.ஏ.பானு பிரசாத் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இவரது துணைவியார் சீதாலதா, பள்ளித் தாளாளர் மற்றும் செயலாளரான துணைப் பொது மேலாளர் (ஆற்றல்) ஜி.செல்வராஜ், துணைப் பொது மேலாளர் (சிமென்ட், இயக்கம்) எஸ்.தினகரன், மனிதவள மேலாளர் பெமிலாபேகம், டிஎன்பிஎல் பப்ளிக் பள்ளி துணை முதல்வர் ஏ.ஆரோஅமலன், டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளித் தலைமையாசிரியர் பி.கீதா, டிஎன்பிஎல் பப்ளிக் பள்ளித் தலைமையாசிரியை இ.அங்கயற்கண்ணி, மழலையர் பள்ளி பொறுப்பாளர் வி.தாமரை புஷ்பம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

2025- 26 கல்வியாண்டில் 100% வருகை புரிந்த மாணவர்கள் மற்றும் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவரும் வகையில் நடைபெற்றன. பள்ளி ஆசிரியை ஏ.அம்பிகா நன்றி கூறினார்.

# திமுக- அதிமுகவுக்கு வாக்களித்து தமிழக மக்கள் தோற்றுவிட்டனர்

## திருச்சியில் சீமான் விமர்சனம்

**திருச்சி/ அரியலூர்**

திமுக- அதிமுகவுக்கு மாற்றி மாற்றி வாக்குகள் செலுத்தி தமிழக மக்கள் தோற்றுவிட்டனர் என்று திருச்சியில் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

திருச்சி சமயபுரம்- மண்ணச்சநல்லூர் சாலை சந்திப்பில் நேற்று மதியம் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் மண்ணச்சநல்லூர் வேட்பாளர் தேன்மொழி, முசிறி வேட்பாளர் பாக்யலட்சுமி ஆகியோரை ஆதரித்து நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியது:

நமக்கு சேவை செய்ய வருபவர்கள் எதற்காக பணம் கொடுக்கவேண்டும். ரூ.30 கோடி செலவு செய்தால் எம்எல்ஏவாகி ரூ.300 கோடி சம்பாதிக்கலாம். அமைச்சரானால் ரூ.3,000 கோடி சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் மக்களுக்கு பணம் கொடுக்கின்றனர். அவர்களிடம் எப்படி மக்கள் சேவை இருக்கும்?

கல்வி, மருத்துவம், மின்சாரம், குடிநீர் அனைத்தும் தனியார் முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மதுவை மட்டும் அரசு விற்கிறது. தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கலை ஏற்றுக்கொண்டதால் நாடுகள் சந்தைமயமாகிவிட்டது. மனிதர்கள் பண்டமாகிவிட்டனர். இதனால் மனிதர்களின் உடல் உறுப்புகள் சந்தை பொருளாகிவிட்டன. அதனால்தான் உழைக்கும் மக்களின் கிட்னியை திருடியவர், உங்களது கிட்னியை விற்றால் நான் கார் வாங்க முடியுமா? என்று கேள்வி எழுப்புகிறார்.

அரிசி, பருப்பு என்று இலவசங்களை கொடுத்து வாக்குகளை பெறுகின்றனர். நமது முன்னோர்கள் செய்த தவறு இனியும் தொடரக்கூடாது.

திமுக- அதிமுக கட்சிகளுக்கு மாற்றி மாற்றி வாக்குகளை செலுத்தினீர்கள். அவர்கள் ஆட்சியில் என்ன மாற்றம் கண்டுள்ளீர்கள். அவர்களுக்கு வாக்குகள் செலுத்தி நீங்கள் தோற்றுவிட்டீர்கள். தமிழர்கள் தங்களது அறம்சார்ந்த வாழ்க்கையை வாழ்வதற்கு, சிறந்த கல்வி, மருத்துவம், குடிநீர், நஞ்சில்லாத உணவு, காற்று, தரமான சாலைகள் கிடைக்க விவசாயி சின்னத்துக்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, திருச்சி கிழக்கு தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கிருஷ்ணசாமியை ஆதரித்து மரக்கடை பகுதியில் மழையில் நனைந்தபடி சீமான் பிரச்சாரம் செய்தார்.

பின்னர், அரியலூர் அண்ணா சிலை அருகில் வேட்பாளர்கள் அரியலூர் புகழேந்தி, ஜெயங்கொண்டம் ரேவதி ஆகியோருக்கு வாக்கு கேட்டு நாம் தமிழர் கட்சி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சீமான் பேசினார்.




திருச்சி மரக்கடை பகுதியில் நேற்று மழையில் நனைந்தபடி பிரச்சாரம் செய்த நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான். படம்: ர.செல்வமுத்துகுமார்

## கரூரில் திமுக, குளித்தலையில் அதிமுக வேட்பாளர்கள் வேட்புமனு

**கரூர்**

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது. இதில், கரூர் தொகுதி திமுக வேட்பாளர் எம்.தியாகராஜன் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சத்திய பாலகங்காதரனிடம் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். அப்போது, முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ, எம்.பி. ஜோதிமணி உடனிருந்தனர். அவருக்கு மாற்று வேட்பாளராக செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்குமார் வேட்புமனு தாக்கல் செய்தார். மேலும், சுயேச்சைகள் உட்பட மொத்தம் 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியர் தி.சுவாதிஸ்ரீயிடம் குளித்தலை தொகுதி அதிமுக வேட்பாளர் கருணாகரன் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், ம.சின்னசாமி, பாஜக மாவட்டத் தலைவர் வி.வி.செந்தில்நாதன் உடனிருந்தனர். கருணாகரன் 2 மனுக்கள், மாற்று வேட்பாளராக அவரது மனைவி உமா தேவி 2 மனுக்கள், தவெக வேட்பாளர் பாலசுப்பிரமணி 2 மனுக்கள், சுயேச்சைகள் உட்பட 17 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அதிமுக மாற்று வேட்பாளராக கே.ஏ.ரோஷியா, தவெக வேட்பாளர் எம்.சத்யா 2 மனுக்கள், பகுஜன் சமாஜ் கட்சி, நாடாளும் மக்கள் கட்சி, தவாக உட்பட சுயேச்சைகள் என மொத்தம் 11 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தவெக வேட்பாளர் பி.கார்த்திகேயன், தவாக ஏஜி ரவி, அனைந்திந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் ஆசியா பேகம் மற்றும் சுயேச்சைகள் உட்பட 11 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.



குணசீலம் பகுதியில் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்ட திமுக வேட்பாளர் எஸ்.கதிரவன் மற்றும் திமுக நிர்வாகிகள்.

### சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில்

## குணசீலம் உள்ளிட்ட 3 ஊராட்சிகளை சேர்ந்த 12,775 பேருக்கு இலவச சிகிச்சை

### திமுக வேட்பாளர் கதிரவன் வாக்குசேகரிப்பு

**திருச்சி**

சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை மூலம் குணசீலம் பகுதியில் 12 ஆயிரத்து 775 பேருக்கு பிரசவம், கை கால் முறிவு உள்ளிட்ட இலவச அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன என்று மண்ணச்சநல்லூர் திமுக வேட்பாளர் எஸ்.கதிரவன் கூறினார்.

திருச்சி மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட முசிறி மேற்கு ஒன்றியம் குணசீலம், கல்லூர், வேப்பந்துறை, மணப்பாளையம், ஆமூர், ஏவூர், கோட்டூர், கருப்பம்பட்டி, காளிபாளையம், ஆசாரிபாளையம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் திமுக வேட்பாளர் எஸ்.கதிரவன் நேற்று தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

முன்னதாக குணசீலத்தில் கதிரவன் பேசியதாவது: குணசீலம், ஆமூர், ஏவூர் ஊராட்சிப் பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து துறைகளின் சார்பில் சுமார் ரூ.6 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எங்களது சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் ஆமூர், குணசீலம், ஏவூர் ஆகிய 3 ஊராட்சிகளைச் சேர்ந்த 12,775 பேர் இலவச சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். இப்பகுதியில் விவசாயம் செழிக்கவும், மக்கள் அமைதியாக, ஆரோக்கியமாக வாழவும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

### தேர்தலை புறக்கணிக்க இறையூர் மக்கள் முடிவு

**புதுக்கோட்டை**

கந்தர்வக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட வேங்கைவயல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் 2022-ல் மனிதக் கழிவு கலந்தது வேங்கைவயலைச் சேர்ந்தவர்கள் என சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதற்கு வேங்கைவயல் கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்தச் செயலில் இறையூர், முத்துக்காடு பகுதியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்பது இவர்களது குற்றச்சாட்டாக உள்ளது. இதுதொடர்பாக, இருதரப்பினருக்கு இடையே அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டு வந்தது.

இந்நிலையில், வேங்கைவயல் சம்பவத்தில் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும். இறையூர் மக்கள் மீது வன்கொடுமை தடுப்பு பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி தேர்தலை புறக்கணிக்க உள்ளதாக இறையூர் மக்கள் நேற்று முன்தினம் இரவு பிளக்ஸ் பேனர் வைத்தனர். 2024-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலையும் இறையூர் மக்கள் புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.



**மேட்டூர் அணை நிலவரம்**

| | |
|---|---|
| நீர்மட்டம் | 82.56 அடி |
| நீர் வரத்து | 2,183 கன அடி |
| நீர் திறப்பு | 1,200 கன அடி |

கல்லணையில் நீர் திறப்பு இல்லை

### புதுக்கோட்டை மாவட்டத்தில் தவெக, தவாக உட்பட 10 வேட்புமனு தாக்கல்

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தவெக, தவாக ஆகிய கட்சிகளின் வேட்பாளர்களின் மனுக்கள் உட்பட மொத்தம் 10 வேட்புமனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

புதுக்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதியில் தமிழக வாழ்வுரிமை கட்சி வேட்பாளர் நியாஸ் அகமது, சமூகத்துக்கு கேடு விளைவிக்கும் யூகலிப்டஸ் காடுகளை அழிக்க வேண்டும். மணல் கொள்ளையை தடுக்க வேண்டும். குடிநீர் தட்டுப்பாட்டை போக்க வேண்டும். மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக யூகலிப்டஸ் செடி, மணல், காலி மதுபாட்டில், காலிக் குடங்களுடன் ஊர்வலமாக வந்து, நேற்று வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அறந்தாங்கி தொகுதியில் தவெக சார்பில் ஜெ.முகமது பர்வேஸ், மாற்று வேட்பாளர் ஆர்.தனசேகரன், ஒரு சுயேச்சை வேட்பாளர் என மொத்தம் 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

திருமயத்தில் தவெக சார்பில் சி.சிந்தாமணி மற்றும் 4 சுயேச்சை வேட்பாளர்கள், கந்தர்வக்கோட்டை தொகுதியில் ஒரு சுயேச்சை வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்தனர். மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் மொத்தம் 10 வேட்புமனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

பொது

சுற்றுலா

Thomas Cook

ANDAMAN
Fully Loaded With Neil Stay
5 NIGHTS / 6 DAYS
Price: INR 35,490 (Ex: Land Only)

EXOTIC KASHMIR
With Gulmarg Stay
6 NIGHTS / 7 DAYS
Price: INR 67,600 (Ex: Bangalore)

CHAR DHAM YATRA
By Helicopter
5 NIGHTS / 6 DAYS
Price: INR 2,32,500 (Land Only)

KAILASH MANSAROVAR
Via Lucknow
9 NIGHTS / 10 DAYS
Price: INR 2,87,000 (Land Only)

MAGICAL VIETNAM
with Cambodia
9 NIGHTS / 10 DAYS
Price: INR 1,98,820 (Ex: Chennai)

JAPAN EXTRAVAGANZA
Summer 2026
7 NIGHTS / 8 DAYS
Price: INR 3,21,688 (Ex: Chennai)

BALI SPLIT STAY
Buy 1 Get 1 Free
5 NIGHTS / 6 DAYS
Price: INR 38,217 (Only Land)

THOMAS COOK INDIA LIMITED
Block No 20, JC Tower, No 17-M2, Ground Floor, Karur Bypass Rd, (nearby Lenovo Laptop Showroom)
Tiruchirappalli
90430 09287

மணப்பந்தல்

மணமகன் தேவை

தமிழ்

CSI 31Y, F , MS ,working in Sanjose USA, seeking suitable alliance any degree, God fearing broad minded willing to relocate to Sanjose , no caste: contact 9884061640.

மணமகள் தேவை

தமிழ்

Bride for 29 Yrs Iyer boy BTech.OwnHouse in chennai. Ct:9500655275

திருமண சேவை மையம்

சிறந்த திருமண வரன்களுக்கு, Sivin Tamil Matrimony App (Play Store). பதிவு இலவசம், 6மாத சந்தா ரூ.2699. போன் : 9677262648, 9840986863

பொது

விற்பனை

EASYTECH
CCTV CAMERA



ஈஸிடெக் செக்யூரிட்டி சிஸ்டம்ஸ்
AN ISO 9001-2008 COMPANY
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88906
95009 30200
www.easytechcctv.com

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

சாலை ரோடு கிளை
74A, சாலை ரோடு, திருச்சிராப்பள்ளி-620018.
தொலைபேசி : 0431-2766542, 8807586545
மின்னஞ்சல்: vjtich@bankofbaroda.com

மின்னணு ஏல அறிவிப்பு

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ - ஏல அறிவிப்பு

**பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 6(2) & 8(6)க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே குறிப்பிட்டுள்ள கணக்கிலிருந்து / கணக்குகளிலிருந்து நிலுவைத்தொகையை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பேங்க் ஆஃப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / கடனீட்டுச் சொத்து/கள் / நிலுவைகள் / குறைந்தபட்ச விலை / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம், முன்வைப்புத்தொகை, ஏல உயர்வுத்தொகை ஆகியவை பின்வருமாறு:

**கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி:** கடன்தாரர்: **M/s. காவேரி ஆயில்ஸ் அண்ட் ஃபுட்ஸ்**, எண்: 32, 3வது மெயின் ரோடு, ரெங்கா நகர், K.K. நகர், திருச்சி - 620021. **பங்குதாரர்கள்: 1) திரு. A சுந்தர்ராம்**, S/o. ஆறுமுகம், எண்: 32, 3வது பிரதான சாலை, ரெங்கா நகர், K.K.நகர், திருச்சி - 620021. **2) திரு.ரெங்கராஜ்**, S/o. ராமலிங்கம், எண்: 2/2, நடுத்தெரு, சர்க்கார் பாளையம், பனையக்குறிச்சி, திருவெறும்பூர், திருச்சி - 620010. **ஜாமீன்தாரர்கள்: 1) திரு. ஆறுமுகம்**, S/o. P.A.. தங்கவேலு, எண்: 32, 3வது பிரதான சாலை, ரெங்கா நகர், K.K. நகர், திருச்சி - 620021. **2) திருமதி வசந்த கல்யாணி**, W/o. ஆறுமுகம், எண்: 32, 3வது பிரதான சாலை, ரெங்கா நகர், K.K. நகர், திருச்சி - 620021.

மொத்த நிலுவைத் தொகை : 17.03.2026 தேதிப்படி ரூ. 29,21,978.16/– மேலும் செலுத்தப்படாத வட்டி, சட்டச் செலவுகள், மீட்புத் தொகை (இதுவரையில் ஏதேனும் இருப்பின்) — அடையாளப்பூர்வ சுவாதீனம்

**அசையா சொத்து விவரம்:** புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் சார்-பதிவு மாவட்டம், இலுப்பூர் தாலுகா, பாக்குடி கிராமம், சர்வே எண்: 246/1A2 (பழைய சர்வே எண் 246/1) புஞ்சை நிலம், பரப்பளவு 0.34.0 ஹெக்டேர் அதற்கிணையாக 0.84 செண்ட். இச் சொத்து M/s. காவேரி ஆயில்ஸ் அன்ட் ஃபுட்ஸ் பங்குதாரர்கள் 1: திரு. A. சுந்தரம் த/பெ. ஆறுமுகம், 2: திரு. R. ரெங்கராஜ் த/பெ. ராமலிங்கம் ஆகியோருக்குச் சொந்தமான சொத்து. அதன் எல்லைகள் தெற்காக – பழனியாண்டிபரங்கியார் மற்றும் இதர விற்பனையாளர்களின் புஞ்சை நிலங்கள்; வடக்காக – புறம்போக்கு நிலம்; கிழக்காக – சாலை, மேற்காக – வாட்டப்பாதை. இச் சொத்து பாக்குடி கிராமம், பாக்குடி பஞ்சாயத்து மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ளது.

| குறைந்தபட்ச விலை | முன்வைப்புத் தொகை | ஏல உயர்வுத் தொகை |
|---|---|---|
| ரூ. 46,46,000/– | ரூ. 4,64,600/– | ரூ. 1,00,000/– |

| ஏலச் சொத்தினை பார்வையிட நாள் மற்றும் நேரம் | ஏலத் தேதி மற்றும் நேரம் |
|---|---|
| 04.05.2026 மாலை 3.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை | 08.05.2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://www.bankofbaroda.bank.in/e-auction.html மற்றும் https://baanknet.com பார்க்கவும். மேலும் விலைக்குறிப்பீட்டாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொலைபேசி எண். 0431-2766542 / 8807586545. மூலம் தொடர்பு கொள்ளலாம்.

இடம் : திருச்சி
தேதி : 18.03.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆஃப் பரோடா

பொது அறிவிப்பு

IN THE HON'BLE HIGH COURT OF MADRAS
W.P. No.: 47540 of 2025

Mr. A. SENTHIL KUMAR,
Son of Annamuthu,
Door no.2/227, East Street
Pattackarampalyam Village,
Perundurai,
Erode – 638 052
And another ...PETITIONERS

-VERSUS-

THE SUB REGISTRAR,
No.7/86, Kasakkarampalayam,
Thingalur,
Erode – 638055.
And another ...RESPONDENTS

To,
Mr. R. GOPALAKRISHNAN,
1/268, Melakkaranthottam,
Kinippalayam, Mettupudur,
Vijayamangalam,
Erode-638056.

SUB: Notice to the 2nd Respondent of the above mentioned case - Reg.

1. This is to inform you that the above mentioned case came up for hearing before the Hon'ble High Court of Madras on 12.02.2026. The Hon'ble Judge was pleased to order notice to the 2nd Respondent through paper publication.

2. You are hereby called upon to appear either in person or through counsel before the Hon'ble High Court of Madras at Chennai on 08.04.2026 at 10:30 A.M. or soon thereafter. Kindly take notice that if you fail to appear on the said date and time, the matter will be heard and decided in your absence.

(S. HAJA MOHIDEEN GISTHI)
COUNSEL FOR PETITIONERS

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by Venkatesan K at THG PUBLISHING PVT.LTD. Ward No. 27, RS No. 43-1B, Ariyamangalam Zone, Varaganery Village, Chennai Bye Pass Road, Senthaneerpuram, Tiruchirapalli-620004. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).